சந்தாதாரரின் கவனத்திற்கு :
காவலன்
வருட சந்தா ரூபா 9-00
6 மாத „ „ 4-50
3 மாத „ „ 2-25
(தபாற் செலவு உட்பட)

# காவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
செய்தித்தாளாகப் பதிவுபெற்றது.

"இறைவனுக்கு மகிழ்ச்சியளிக்கும் எண்ணத்தினல் உந்தப்பட்டுச் செய்யும் சிறு சிறு செபங்கள் மாபெருஞ் செயல்களாக மாறுகின்றன."
— ஒரு புனிதர்

94-ம் புத். | 1969-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 6-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 34-ம் இல.

சம்பேதுரு சதுக்கத்தில் சப்திக்கும் ஒலிகள்

# எங்கள் வாழ்வில் செபமும் இன்பமும்



(பரிசுத்ததந்தை அண்மையில் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அளித்த பொதுப் பேட்டியில் ஆற்றிய உபந்நியாசம்.)

அருமையான
புத்திரர் புத்திரிகளே!

நீங்கள் என்னைத் தரிசிக்க வந்தது பிள்ளைகட்குரிய அன்பின் நிமித்தம் மட்டுமல்ல, ஞான ஒளியை அடைய இருக்கும் ஒரு மறைந்த அவா, தேவை, நம்பிக்கை என்று நான் விசுவசிப்பதினுல் உங்களோடு தந்தைக்குரிய முறையில் பேச விரும்புகிறேன். இப்படியான ஓர் ஒளி இன்றும் என்றும் எமக்குத் தேவை என்பதை முன்னைய கூட்டத்தில் நான் குறிப்பிட்டேன். தற்போது விரைந்துபோய்க் கொண்டிருக்கும் ஆழமான மாற்றங்களிலும் வெளி முயற்சிகளிலும் நாம் ஈடுபட்டிருப்பதால் தனிச் செபக்குணத்தில் ஆழமாகப் பயிற்சியடைந்து உறுதி பெறுவது தற்காலத்தில் மிகமுக்கியமாகும். எம்மிடம் ஆழமான செபக்குணம், விசுவாசம், பிறர் அன்பு என்பன இல்லாவிட்டால் நாம் கிறிஸ்தவர்களாய் வாழமுடியாது.

ஞானக்காரியங்களையும், உலககாரியங்களையும் நன்ருக அறிந்து கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் தானும், வெளிக்காரியங்களில் அதிகம் கண்ணேட்டமுள்ளவர்களாயிருந்து, செபக்குணம் குன்றியதினுலேயே அவர்கள் இன்றைய நாட்களில் தம் மகத்துவமான நிலையிலிருந்து இறங்கியுள்ளார்கள். உலக காரியங்களிற் கண்ணேட்டம் குறைய, செபக்குணம் மேலோங்கும். பிரமாணிக்கமும், சந்தோஷமும் உருவாகும். நீங்கள் எந்த வயதிலும், அந்தஸ்திலும் இருந்தாலும் உங்களுக்கு உதவியும் ஆறுதலும் கொடுக்க செபவாழ்வின் குணத்தை சாதாரண பாஷையில் விளக்க விரும்புகிறேன். நீங்கள் செபிப்பதற்கும் கடமைகளைச் செய்வதற்கும், தனிப்பட்டமுறையில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்குமென நான் எண்ணுகிறேன். ஆனல் வத்திக்கான் சங்க புதிய முறைகளின்படி மனித்த் தன்மையை மதிக்கும் தற்போதய புதுவாழ்வில் திருவழிபாட்டுடன் இணைந்து செபத்தில் பிரமாணிக்கமும் ஆர்வமும் உள்ளவர்களாய் இருக்க விரும்புவீர்களென நான் நம்புகிறேன்.

செபப்பற்றுள்ளவர்களில் பலவகைப்பட்டவர்கள் உளர். அவர்களைப்பற்றி நாம் கூற இருக்கும் வகை ஒன்றில் நீங்கள் சேர்ந்திருக்கலாம், முதலாவது பெரும்பான்மையானவர்கள், ஞானக்காரியத்தில் பற்றற்றவர்கள். இவர்கள் உலக காரியங்களில் மூழ்கியிருந்தாலும் தேவநேசச் சுடர் உடையோர். இவர்களில் விசுவாச விதை இன்னும் இறக்கவில்லை. நற்செய்தியிலுள்ள உவமைப்படி சில முட்கள் நடுவே விழுந்தன. பிரபஞ்சத்தின் கவலையும் ஐசுவரியத்தின் மாய்கையும் வாக்கியத்தைநெருக்க விதை பலன் கொடாமற்போனது: மனுஷீகத்துக்குரிய செயல்களின் நாட்டமும் பிரசித்த சீவியத்திலும், தனிப்பழக்கங்களிலும், செபவாழ்வைப் படிப்படியாக அகற்றுகிறது. கடந்துபோகும் ஒவ்வொரு நாளிலும், காலை மாலைச் செபத்தின் விலைமதிப்பை உணர்ந்து செபித்து இன்றுவரை மக்கள் வாழ்ந்து வருகிருர்களா? மக்கள் ஒழுங்காகத் தேவாலயத்துக்குப் போய் பொதுச் செபத்தில் பங்கெடுப்பதை நாம் காண்கின்ரேம். ஆனல் அவர்கள் உள்ளங்கள் எங்கே? இப்படியாக செபத்தில் அன்பும் பற்றும் இல்லாதவர்களுக்கு செபமானது நீண்டதாகவும், விளங்கமுடியாததாகவும் காணப்படும். இவர்களின் செபம் மேலெழும்ப முடியாததினுல், இன்பத்தையும், அமைதியையும் அனுபவிக்க முடியாமலிருக்கும். இப்படிப்பட்டவர்களின் தரத்திலா நாம் சேர்ந்திருக்கிரேம்?

இரண்டாம் வகையைச் சேர்ந்தவர்கள் வத்திக்கான் சங்கத்தின்பின் திருவழிபாட்டு மறுமலர்ச்சியால் தொகையில் அதிகரித்துள்ளனர். இவர்கள் சந்தேகமுடையவர்கள். குறைகூறுபவர்கள். மனத்திருப்தியற்றவர்கள். இவர்களின் பக்திப்போக்கு குளப்பப்பட்டுள்ளது. இவர்கள் மாற்றங்களின் கருத்தை அறியாமலும் அவற்றைக் கண்டறியத் துணியாமலும் பழைய

(தொடர்ச்சி 2ஆம் பக்கம் பார்க்கவும்)

## இலங்கைத் திருச்சபையின் எதிர்காலம் நன்ருக இருக்கின்றது

சமய—சமூகஆராய்ச்சி இலங்கையில் நுட்பமான நவீனமுறையில் ஆராய்வு செய்ய சென்ற இருமாதங்களாக இங்கு வந்திருந்த கனன் கூற்ருட் அடிகளார் சென்றவாரம் தனது ஆரம்பவேலைகளை முடித்துக்கொண்டு பெல்ஜியம் தேசத்துக்குத் திரும்பிவிட்டார். ஆராய்வின் முடிவுகள் வருகிறவருடத்தில் வெளிவரும். ஆனல் அவர் இலங்கையை விட்டுப்பிரியுமுன் நடந்த ஓர் கூட்டத்திலே இலங்கைத் திருச்சபையின் எதிர்காலம் நன்ருகஇருக்கின்றதெனக் கூறியிருக்கின்ருர். அவரது அபிப்பிராயத்தின்படி வருகிற 10வருடங்கள் இம்முன்னேற்றம் தீவிரமானதோ அல்லது மந்த நடையுள்ளதோ என்பதை முடிவு செய்யுமென்ருர். மேலும் அவர் இலங்கையிற் திருச்சபை தன்னுள் மாத்திரமே இயங்கும் நிலைமையைமாற்றி பிறமக்களுடனும் தொடர்பு கொள்ளத் தொடங்கியிருப்பதைக்கண்டு மகிழ்ச்சிதெரிவித்திருக்கிருர். அவர் இலங்கையில் நடத்திவந்த வேலையைச்சித்தியுடன்செய்து முடிக்க பல மேற்றிராசனங்களும் உதவிசெய்ததற்கும், விசேஷமாக கத்தோலிக்கர் அல்லாத பிறசமயமக்கள் அளித்த ஒத்துழைப்புக்கும் அவர் மனமார்ந்த நன்றி தெரிவித்திருக்கின்ருர்.

## சிதறிக்கிடக்கும் போலாந்து மக்களின்
### வத்திக்கான் யாத்திரை

பலதேசங்களிலும் சிந்திச் சிதறிக் கிடக்கும் போலாந்து கத்தோலிக்க மக்கள் சுமார் 4000பேர் சில வாரங்களுக்கு முன் பாப்பரசரைத் தரிசிக்கச் சென்றிருந்தனர். அவர்களுள் பலர் குருமாரும் மேற்றிராணிமாரும்வேறும் உயர் உயர்பதவிவகித்தவருமாவர். இவர்களை வரவேற்று பரிசுத்த தந்தை பரிவுடன் அவர்களுடன் உரையாடினுர்: 1966-ம் ஆண்டு போலாந்து தேசம் 1000 ஆண்டு கிறிஸ்தவ வயதை அடைந்தபோது தான் கூறிய வார்த்தைகளை அவர்களுக்கு நினைவூட்டி உண்மையான போலாந்து மக்கள் யாவரும் உறுதியான கத்தோலிக்கரே என்று கூறி அவர்ளுக்கு உற்சாகம்ஊட்டினுர். மேலும் தான் போலாந்துதேசத்தில் வசித்தசில மாதங்களில் போலாந்து மக்களுடைய வேதவைராக்கியத்தை நன்கு அறிந்து விட்டதாகவும் கூறி அவர்களது துன்பங்களில் தாமும் பங்கு பங்கு பற்றிக் கொண்டார்.

# எமது சத்துராதிகளையும் நாம் நேசிக்க வேண்டும்

இனத்துவேஷம் நிறைந்தகொலைஞனின் கைத்துப்பாக்கிக்கு இலக்காகு முன் சிலதினங்களுக்கு முந்தி முன்னுள் அமெரிக்க நீகிரேருத் தலைவர் மாட்டின் லூதர்கிங் அடிகளார் எமது சத்துராதிகளையும் நாம் நேசிக்கவேண்டும் என்று காட்டி பத்திரிகையில் எழுதியிருந்தார். அதற்கு அவர் கொடுத்த காரணங்கள் பின்வருமாறு:

"எம்மை வெறுப்பவர்களை நாம் வெறுத்தால் இருளுள்ள இரவை மேலும் இருளடையப் பண்ணுவதற்குச் சமமாகும். பலாத்காரம், வன்முறையைகையாள்வதும் இப்படியே, பழிக்குப்பழிவாங்குவதனுல் எவ்வாறு நிலைமை திருந்த முடியும்? வெறுப்பு ஆன்மாவைப் புண்படுத்துகின்றது. அதன் புனித உருவை மாற்றுகின்றது. வெறுப்புக்கு இலக்காகுபவனுக்கு அது துன்பத்தை வருவிக்கின்றது. வெறுப்பு உண்டாகும்போது உடனே தடுக்கப்படாவிடின், தொற்றுநோய்போல் பரவி, நீதிநியாயமாகியவற்றைக் கெடுத்து அழ அழகுள்ளவற்றையும் அவலட்சணமாகத் தோற்ற வைக்கும். ஆகவே எவரையும் வெறுக்காது எங்கள் சத்துராதிகளையும் நாம் நேசிக்கவேண்டும்."

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதியர்க்கழகு..?

'சுவாமி! எனக்காக மன்றாடுங்கள்.' மனத் துயரில் சுழலும் மனிதனின் விண்ணப்பம் இது. 'சுவாமி! அயலிடம் சென்றிருக்கும் என் மகனுக்காக மன்றாடுங்கள்.' தன் மகனின் நலனை விரும்பும் தாயின் தவித்த வேண்டுகோள் இது. 'சுவாமி! நான் சோதனையில் சித்தி பெற மன்றாடுங்கள்.' சோதனை எடுக்கும் மாணவனின் மன்றாட்டம் இது. இப்படியே அடுக்கிக்கொண்டே போகலாம் தினமும் ஒரு குருவை அண்டி வருவோரைப்பற்றி.

ஆனால், அக் குருவுக்காக நாம் மன்றாட வேண்டும் என்று என்றாவது நினைத்ததுண்டா?

என்னே! மனிதனுக்கும் கடவுளுக்கும் பாலம்போல் நின்றுதவும் குருவுக்காக நாங்கள் மன்றாடுவதா? தேவனிடம் எமக்காகப்பரிந்துபேசத் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட குருவுக்காக நாங்கள் மன்றாடுவதா? இது வினோதமாகவல்லோ இருக்கிறது என்பீர்களாக்கும். அப்படியாயின், புனித சின்னப்பரின் வாய்மொழியைக் கேளுங்கள். "குருதானும் (ஏனைய மக்களைப்போல்) பலவீனம்நிறைந்தவராயிருப்பதினாலே அறிவீனரோடும், நெறிகெட்டவர்களோடும் அனுதாபங்கொள்ளக் கூடியவராக இருக்கிறார்" என எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் 5-ம் அதிகாரத்தில் 2-ம் வசனத்தில் எடுத்துரைக்கின்றார்.

குருக்களும் எம்மைப்போல் ஆசை/பற்று நிறைந்த மனிதப் பிறவிகள் தான்; ஆதாம் ஏவையின் வழித்தோன்றல்கள்தான் என்பதை நாம் மறத்தல் ஆகாது. இதன் நிமித்தம் குருத்துவத்தின் மகத்துவத்தை நாம் குறைவாக எடைபோட இடமே இல்லை. மக்கள் மத்தியிலிருந்து, மக்களுக்காகக் கடவுளால் பிரித்தெடுக்கப்பட்ட இக்குரு, பரமனின் அருட் கொடைகளை வழங்கும் அருட் சாதனங்களை நிறைவேற்ற அதிகாரம்உடையவராய், மனம் உடைந்தோருக்கு ஆறுதல் தரும் அன்பராய், காயப்பட்டோரைக் குணப்படுத்தும் பரலோக வைத்தியராய், திசை மாறிச் செல்லும் பரலோக பிரயாணிக்கு நல்வழிகாட்டும் வழித்துணையாய், பசித்திருப்போருக்குத் தன் மாமிசத்தையே உணவாகத் தரும் கிறிஸ்துவின் பதிலாளியாய், அப்ப இரசக் குணங்களுக்குள் கிறிஸ்துநாதரை வரவழைக்கும் அற்புத சக்தி வாய்ந்தவராய் இருப்பதை நாம் அசட்டை செய்யலாகாது.

இத்துணை அருமை பெருமையை அவர் கொண்டிருப்பினும் அவர் ஆதாமின் மக்களுள் ஒருவர்தான்; சோதனைச் சூறாவளியில் சுழலக்கூடிய ஒரு துரும்புதான்; ஆசாபாசங்களின் அலைக்களிப்புக்கு ஆளாகக்கூடிய மனிதன்தான்; தவறிவிழக்கூடிய பலவீனன்தான் என்பதையும் எம் கருத்தில் கொள்ளுவோமானால், உண்மையான விசுவாசத்துடன்கூடிய அபிமானமும் அன்பும் எம்மிடம் இருக்குமேயாயின், இவ்வுயர்பதவி வகிக்கும் இவ்வேழை மனிதனுக்காக எம் உள்ளம் இறைவன்பால் தாமாகவே எழும்பி விண்ணப்பங்கள் புரியாதோ?

எம்அகக்கண்களைச் சற்றே திறந்துபார்ப்பின், எப்பக்கத்திலும் ஆபத்துக்கள் நிறைந்த சூழ்நிலையில் கடமையாற்றுகின்றனர் இத்தியாககுருக்கள் எனக் காண்போம். இவர்கள் தவறிவிழாதபடி இறைவன் இவர்களைத் தம் அருட் கரத்தால் தாங்கும்படி நாம் பெருமூச்செறிந்து பரலோக தந்தையை மன்றாடாதிருப்போமா? எம் மீட்பர் கிறிஸ்துவோடு சேர்ந்து 'பிதாவே! அவர்களை உண்மையில் அர்ச்சித்தருளும்' என விண்ணப்பியாதிருப்போமா?

தொட்டில்தொடக்கம் இடுகாடுவரை உன்னோடிருந்து உனக்குத் துணைபுரியும் இக் குருகுலத்தின் சேவையைச் சற்றே சிந்தித்துப்பார். ஜென்ம பாவ தோஷத்தோடு சாத்தானுக்கு அடிமையாகப் பிறந்த உன்னை, திருமுழுக்காட்டினால் சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து தேவனின் சுவீகாரப் புத்திரனாக்கிவிட்டார். புத்திவிபரம் அறிந்தபின் நீ இழைத்த தீங்குகளால் உன்ஆன்மாவில் ஏற்பட்ட பாவக் கறையை, காயத்தை, புரையோடின இரணத்தைக் கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவித் தூய்மையாக்குகின்றார். நீ உன் தவறை உணர்ந்து, வெறுத்து, நல்வழி நடக்க உறுதிபூண்டு குருவை அண்டிச்சென்று உன் பாவத்தை அறிக்கையிடும்போதெல்லாம் நல்லுரை வழங்கி, நல் வழி காட்டும் இந் நல்லுபகாரிக்கு நீ கடமைப்பட்டவனாகத் தோன்றவில்லையா? கிறிஸ்துவின் சரீரத்தை உனக்கு உணவாக ஊட்டுகின்றாரே நீ திருப்பந்தியில் இடம்பெறும் போதெல்லாம். நீ மரணப் படுக்கையாய்க் கிடக்கின்றாயோ, இல்லை, நீ நோய்வாய்ப்பட்டுப் பாயும் படுக்கையுமானாயோ, அத்தருணம் இக்குரு உனக்கு ஆறுதல் கூறி, மறு உலகப் பிரயாணத்துக்கு உன்னைத் தக்கவாறு ஆயத்தப்படுத்துகின்றாரே; கிறிஸ்துவின் மகிமைக்காக தன்னை உனக்கு ஊழியனாக்கிக்கொள்ளும் இத்தந்தைக்கு நீ காட்டும் அன்பென்ன? செய்யும் உதவி என்ன? "உப்பிட்டாரை உள்ளளவும் நினை" என்றால், உன் தோற்றம் முதற்கொண்டு உன் மறைவு வரைக்கும் உனக்கு இணைபிரியாத் தோழனாக நின்றுதவும் இத்தந்தைபால் உன் கடமை என்ன? அன்பனே! சிந்தித்துப்பார். காசு, பணம் இல்லையா? பரவாயில்லை. அவர் அதை உன்னிடம் கேட்பதில்லை. ஆனால், நீ எங்கே இருந்தாலும், எவ்வளவு முட்டுப்பாடு, தட்டுப்பாடு உடையவனாக இருந்தாலும், உன்னால் எப்பொழுதும், எவ்விடத்திலும் இத் தந்தைக்குச் செய்யக்கூடிய உதவி ஒன்றுண்டு. அதைத்தான் அவரும் ஆவலுடன் உன்னிடம் கேட்கின்றார். அது என்னவென்று இன்னும் நீ அறியவில்லையா? அவருக்காகத் தினமும் மன்றாடுவதுதான் அது.

அவரது பதவி எவ்வளவு உன்னதமோ, அவ்வளவுக்கு அவரது கடமையும், பொறுப்பும் பெரிதே. தன்னை அண்டி வருவோன் எத்திறப்பட்டவனாயிருப்பினும், அவன் நிலை அறிந்து, அவனுக்கு ஏற்ற முறையில் ஆண்டவன் அருள் வழியில் அவனுக்கு அறிவுரை வழங்கித் தேற்றி அனுப்ப, கிறிஸ்துவைப் பின்பற்றுமாறு தூண்ட எத்துணை ஞானமும், பொறுமையும், விவேகமும், அறிவாற்றலும் தேவை. அத்தகைய கொடைகளைப் பரமன் அவருக்கு அருளுமாறு நாம் பிரார்த்திக்கவேண்டாமா?

தேவ வசீகர வார்த்தைகளால் தேவனையே அப்ப இரசக்குணங்களுக்குள் கொண்டு வரும் குருவின் உள்ளம் எத்துணை தூய்மையும், வாய்மையும், அன்பும் நிறைந்ததாயிருக்கவேண்டுமென்று வேளாவேளைகளில் எடைபோட்டுப் பார்க்கும் நாம், அவரை உலக ஆபத்துக்களில் நின்று பாதுகாக்குமாறு மன்றாடத் தவறுவது ஏன்? கிறிஸ்துவின் பதிலாளியாகிய அவர் மறு கிறிஸ்துவாகத் தம் சொல்லாலும் செயலாலும் விளங்கவேண்டுமென்று மன்றாட மறப்பது ஏன்? கிறிஸ்துவின் மறை உடலின் அங்கங்களாகிய நாம், அச்சரீரத்தின் தலையாகிய கிறிஸ்துவின் பதிலாளிகள் தம்கடமையில் தவறாது இருந்தால் தானே சரீரம் சுகத்துடன் இருக்கும் என்பதனைச் சிந்திக்கவேண்டாமா?

இவ்வுண்மைகளை நன்குணர்ந்தும், குருக்கள் தங்கள் அந்தஸ்துக்கு ஏற்ற ஒழுக்கமும் விழுப்பமும் உடையவராயிருக்க மக்களின் மன்றாட்டங்களின் அவசியத்தை உய்த்துணர்ந்தும், இரட்சகர் சபையைச் சேர்ந்த அதிவண. பாஸ்கால் அடிகளார் குருக்களுக்காக மன்றாடுவதற்கென ஒரு திட்டந் தீட்டி, அதற்கென்றே பிரத்தியேகமான ஒரு பூசையையும் உருவாக்கி, தமதிட்டத்தை 1934-ம் ஆண்டின் கார்த்திகைத் திங்களில் 21-ம் நாளன்று பரிசுத்த தந்தை 11-ம் பத்திநாதருக்குச் சமர்ப்பித்தார். தந்தைஅவர்கள் இத்திட்டத்தை மிகவே புகழ்ந்தேத்தி, தமது மனப்பூர்வமான ஆசீரையும் அதற்கு அருளினார். விரைவாக இப்பக்திமுயற்சி பரவ ஆரம்பித்தது. இரண்டு வருடத்துக்குள் நான்குகோடிமக்கள் முதல் வெள்ளிப் பக்தியை அனுசரிப்பதுபோல் இப் பக்திமுயற்சியையும் அனுசரித்துவரத் துவக்கினர்.

[illegible]

## அன்பர்  அரங்கம்

பொருள்: பிள்ளைகளின் நெறிவாழ்வும் பெற்றோரும்.

பேச்சாளர்: திருமதி அந்தோனிபா சாமிநாதர், எம். எம். சி.

இடம்: மொன்போட்சாலை, ஆசனக்கோவில், யாழ்ப்பாணம்.

நேரம்: பி. ப. 5-00 மணி.

திகதி: 9-9-69.

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

## எங்கள் வாழ்வில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கைகளை விட மனமின்றி முறைப்பாடுகளில் காலத்தைப் போக்குபவர்கள். இப்படியான மனப் போக்கினால் திருச்சபை ஞான அதிகாரத்தினால் ஏற்படுத்திய திருவழிபாட்டு மறுமலர்ச்சியின் கருத்தையும் மகிழ்ச்சியையும் அனுபவிக்க முடியாமலிருக்கின்றார்கள். இவர்கள் முன்னேற விரும்பினால் கஷ்டமல்ல, அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு, அதன் மகத்துவத்தை நேர்மையுடன் விளங்குவார்களானால் தனிமனிதர் ஒவ்வொருவரும் ஆறுதலையும் புனிதத்துவத்தையும் இப் பொதுச் சடங்குகளினால் அடைவார்கள் அல்லவா? உட்சியம் மேலான பூரண புனிதத்துவத்தையடையும்.

மூன்றாவது தரத்திலுள்ளவர்கள் ஒரு சிறிது அன்பு செய்து, அயலாரை மேலானவிதமாய் அன்பு செய்பவர்கள். இவர்கள் செபவாழ்வைமேலானதாகக்கருதாமல் பிறருக்குத் தொண்டு செய்வதையே தம் வாழ்வின் நோக்கமாகக் கொள்கிறார்கள்; இவர்கள் ஆண்டவனின் அருளை நேரானவிதமாகப் பெறாமல் விடுவதால் இவர்கள் ஆன்ம வாழ்வை, சமூக சேவை மேற்கொள்ளுகின்றது. இப்படியான கொள்கை, செபக்குணம், மன அமைதியற்ற, அர்ப்பணிக்கப்பட்ட ஆத்துமாக்களின் ஆழ்ந்து ஆராயாத பேச்சுக்களினாலும், பிரசாரங்களினாலும் பொதுமக்களுக்குப் பரப்பப்படுகிறது. இவர்கள் திருச்சபை சர்வாதிகாரமும்போலித்தனமுமுடையதுஎன்று கூறி அதன் உண்மையான வேதமுறைமைகளிலிருந்து விலகி பிறர் மட்டில் அனுதாபம் கொள்கிறார்கள்: இவ்விதமான அனுதாபம்தன்னிலேதானே நல்லதும் தகுதியுமானது. ஆனால் வெகுவிரைவில் வேத உண்மையையும் தேவ அன்பையும் இழந்துவிடுவர்.

கடவுளின் இரட்சணிய வேலையையும் திருச்சபையின் அருள் வாழ்வையும் முதலிடமாகக் கொள்ளாமல் சமூக நிலையையும் சரித்திர அரசியல் சம்பந்தமான விடயங்களையுமே முதற் குறிப்பிடுகிறார்கள். இவர்களைப் பற்றி அதிகம் கூற முடியும். ஆனால் தற்போது அல்ல. உண்மைச் சுயாதீனம், அன்பு, ஒற்றுமை, சமாதானம் அருள்வாழ்வை விரும்புபவர்களுக்கு, உதார குணமுள்ளவர்களும், நற்செய்தியில் அவாக் கொண்டவர்களும், தனக்கடுத்த ஞான வாழ்வையுடையவர்களுமே பாதுகாப்பாகவும், எடுத்துக் காட்டாகவும் முன்வைக்கலாம்.

எனவே நாம் கிறீஸ்துநாதரால் குறிப்பிடப்பட்ட திபங்களைக் கையில் ஏந்தியவர்களுடன் சேர்ந்து கொள்வோம். எது இல்லாவிட்டாலும் செபம் நாம் செல்லும் பாதையில் ஒளியை உண்டு பண்ணுகிறது. விழிப்பாயிருக்கப் பண்ணுகிறது, மனச்சாட்சியைத் தூண்டுகிறது. செபம் எமது வாழ்வின் துன்பங்களையும் இருளையும் மேற்கொள்ளுகிறது. இதற்காகவே ஆண்டவர் நற்செய்தியில் எமக்கு இரு கட்டளைகளைக் கூறியுள்ளார்: விழித்திருந்து செபம் பண்ணுங்கள். இதுமட்டுமல்ல பொதுநிலையிலுள்ளவர்களும் அடிக்கடி தமது உள்ளங்களை தேவன் பக்கம் எழுப்பி பிள்ளைக்குரிய விதமாய் சல்லாபித்து தூய ஆவியின் ஞானத்தைக் கொண்ட செபச்சிவியப் பழக்கத்தைநடைமுறையில் கொண்டுவர வேண்டும். புனித தோமையார் கிறீஸ்துநாதருக்கும் மார்த்தா, மேரி என்போருக்குமிடையில் நடந்த சம்பாஷணையைக் குறிப்பிட்டுக் கூறுவதாவது: மேரி உத்தமமான பங்கைத் தெரிந்தாள் அது அவளிடத்திலிருந்து எடுக்கப்படமாட்டாது. இந்த ஆறுதலான வார்த்தைகளை உங்களுக்குக் கூறி என் ஆசிரை அளிக்கின்றேன்.

## நன்றியறிந்த தோத்திரங்கள்

மகிமையுள்ள புதுமைமாதாவிடம் இரந்துகேட்கப்பட்ட மன்றாட்டு குறித்தகாலத்துள்கிடைத்ததால் நன்றியறிதலாக நேர்த்தியின்படி பிரசுரிக்கின்றேன். அவவுடைய நாமம் எங்கும் புகழப்படக் கடவது.

அல்லைப்பிட்டி பா.

* * *

புனித அந்தோனியாரிடம் இரந்து கேட்ட கருமம் அனுகூலமானது. நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன். அவரது நாமம் புகழப்படக்கடவதாக.

ஒரு பக்தர்

* * *

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், வேளாங்கண்ணி அர்ச். ஆரோக்கியமாதா உதவியாலும் எனக்கு ஏற்பட்ட கடின கால் இழுப்பு சுகமானது. தேவ தாய்க்கு நன்றி

ஒரு பக்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்புள்ள தம்பி - தங்கையரே, வணக்கம் !**

எதிர்வரும் புரட்டாசித்திங்கள் எமது அன்னை உதித்த நாள். எம்எல்லவர்க்கும் ஆனந்தம் நிறைந்தநாள். இன்று குதூகலங் கொள்ளுவோம்; மூத்தருடனும் வானவருடனும் அன்னையைப் போற்றுவோம். அன்னையை எமக்குத்தந்த அமலனைப் போற்றுவோம்;

பரலோக அன்னை பிறந்ததினத்தில் எம்மைப்பெற்றெடுத்த அன்னையரையும் நினைவுறுமலிருப்ப தெப்படி? எம்மைப்பெற்று, அமுதூட்டி, அன்புசொரிந்து, கவிபாடிக் களிப்புறச்செய்தது எம்அன்னை. பேசக்கற்பித்து, எம்மழலை மொழிகேட்டு மட்டில்லா மகிழ்ச்சிபெற்றவள் அன்னை. பாதத்தில் தூசிபடாமல் தன்ஒக்கலிற் சுமந்தும், பின் நடைபழக்கியும் விட்டவள் அன்னை. கசப்பான பள்ளிப்பருவத்தில் எம்மை அடித்துப் பள்ளிக்கு அனுப்பி வைத்தவள் அன்னை. அதாவது தனக்கெனவாழா எமக்கென வாழ்ந்தவள் எமது அன்னை.

ஆகையால், இத்தினத்தை—அதாவது அடுத்துவரும் 8-ம் நாளை "அம்மா தினம்" என அனுசரியுங்கள்: அன்று வீட்டில் உள்ள அனைவரும் திவ்வியபூசை கண்டு, திருவிருந்து அருந்தி, அம்மாவின் ஆன்மசரீர நலன்களுக்காக ஒப்புக் கொடுங்கள். அன்று வீட்டிலுள்ள வேலைகளை எல்லாம் செவ்வனே செய்து அவர் உங்கள் வீட்டு எசமாட்டி என நீங்கள் உணருவதாகக் காட்டுங்கள்: மாலையில் நீங்கள் பள்ளியில்கற்ற ஆடல்பாடல்களை அம்மாவுக்கு ஆடிப்பாடிக் காட்டுங்கள். அப்பாவிடங்கேட்டு அம்மாவுக்கு விருப்பமான பொருள் ஒன்றைக் கொடுத்து உங்கள் அன்பையும், அமைச்சலையும் அர்ப்பணஞ்செய்யுங்கள். அம்மாவுக்கு ஜே! கூறி அகமகிழச் செய்யுங்கள்.

அண்ணை.

# சிவப்பு விளக்கு

— முல்லைநாதன் —

வசந்தகாலத்தின் இளந்தென்றல் சில்லென்று வீசியது. இளமதியின் அழகுத்தோற்றம் இதயத்தின் சிந்தனையைக் கிளறியது. அமைதிக்கு அறைகொடுப்பதுபோல் நீலக்கடல்அலைகள் ஓசைஎழுப்பின.

கடற்கரையின் மணற்பரப்பிலே சுமதி சல்லாபமாக விளையாடிக் கொண்டிருந்தாள். சுமதியின் பெற்றோர் அவளின் விளையாட்டிலே மெய்மறந்தவர்களாகி உரையாடிக்கொண்டிருந்தனர். சுமதி ஒரேயொரு மகளாதலால் மிகவும் செல்லமாகவளர்ந்து எட்டாவது வயதை அடைந்துவிட்டாள். ஆவணித்திங்கள் 15-ம்நாள் சுமதியின் பிறந்தினமாதலால் அதைமிகக் கோலாகலமாகக் கொண்டாட வேண்டுமென்று பெற்றோர்கள் உரையாடிக் கொண்டிருந்தனர்.

இளமதியின் அழகும் தென்றலின் மெல்லிய இசையும் அவர்களை மெய்மறந்து உரையாடவைத்தன. நேரம்போனதே தெரியவில்லை. சுமதி துள்ளிக்குதித்து ஓடிவந்து, "அப்பா! வீட்டிற்குப் போவோமா" என்றாள். அவர்களும் நேரத்தை உணர்ந்தவர்களாய், 'ஆம் சுமதி' என்று எழுந்தனர். பெரிய தெருவை அண்மித்திருக்கும் அவர்களின் வீட்டிற்குப் போவதற்குச் சம்பத்திரிசியார் கல்லூரித் தெருவால்வந்து மாதாகோவில் முன்பக்கமாகச் செல்லும்பொழுது ஆலயத்தின் கதவுகள் அகலத் திறந்திருப்பதைக்கண்ட குறும்புக்காரச் சுமதி கோவிலுக்குள் சென்று "அம்மா அப்பா" என்று கூப்பிட்டு, தாயின்கரங்களைப்பிடித்து "அங்கே தெரிகிற சிவப்புவிளக்கு எதற்காக வைக்கப்பட்டிருக்கிறது?" என்றாள். ஆமாம், சுமதி அப்படிக் கேட்பதில் வியப்பேயில்லை; ஏனென்றால் அவர்கள் கத்தோலிக்கரல்லாத கிறிஸ்தவர்கள்.

"சுமதி! உஸ் ...... சப்தம் போடாதே! அங்கேதான் ஆண்டவர் இருக்கிறார் என்பதை அறிவிப்பதற்காக அந்த விளக்கு வைக்கப்பட்டிருக்கிறது. வாம்மா போகலாம்" என்றாள் தாய்.

"அம்மா! அப்படியானல் எங்களின் ஆலயத்தில் விளக்கு எரிவதில்லையே. அங்கே ஆண்டவர் இல்லையா அம்மா?" என்ற கேள்வியைப் போட்டாள் சுமதி. எவ்வளவோ சொல்லியும் சுமதி ஆலயத்தை விட்டு வெளியில்வர மறுத்துவிட்டாள். "அம்மா! ஆண்டவர் இருக்கிற இடத்திற்குத்தான் நான் செபம்பண்ண வருவேன்! என்னை இங்கேதான் நீங்கள் கூட்டிவரவேண்டும்?" என்று அடம்பிடித்து நின்றாள் சுமதி.

"சரியம்மா உன்னுடைய விருப்பப்படியே செய்கிறோம். நீ இப்பொழுது வீட்டிற்கு வா?" என்றாள் தாய். ஆலயத்துள் தமது கடமைச் செபத்தில் ஈடுபட்டிருந்த குருவானவர் சுமதியின் பிடிவாதத்தன்மையைக்கண்டு தம்முடைய செபத்தை முடித்துக்கொண்டு சுமதியிடம்வந்து அவளைச் சமாதானப்படுத்திவீட்டிற்குச் செல்லவைத்தார். சுமதி மனநிறைவோடும் சந்தோஷத்தோடும் வீட்டிற்குச் சென்றாள். ஒரேஒருமகள் செல்லமாக வளர்பவளல்லவா சுமதி! அவளின் இஷ்டப்படியே பெற்றோரும்நடக்கவேண்டியதாயிற்று. ஆவணித்திங்கள் 15ஆம் நாள் சுமதியின் பிறந்தினத்தோடு அதே தேவாலயத்தில் சுமதி ஒரு கத்தோலிக்க சிறுமியாக ஞானமுழுக்குப்பெற்றாள். அவளின் பிறந்தநாள் சுமதியின் வாழ்வில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட ஒரு புதுநாள்.

# தாயே உனை மறப்பேனே?

யாழ்—"ஜெயம்"

என்னைப் பெற்றுப் பாலூட்டி
இருகை வைத்துத் தாலாட்டிக்
கண்ணை இமைகள் காப்பதுபோல்
காத்தவளே! உனை மறப்பேனே.

✻

அல்லும் பகலும் உறங்காது
அணைத்துக் காத்து வளர்த்தவளே!
பொல்லாத் துயர்கள் எனக்காகப்
பொறுத்தவளே! உனை மறப்பேனே.

✻

ஓயா துழைத்து எனக்காக
உடலம் இளைத்துத் துரும்பானய்
தாயே! உன்னை மறப்பேனே.
சாகுந் தனையும் மறப்பேனே;

✻

ஆலைக் கரும்பு போலேஉன்
அன்பைப் பொழிந்து வளர்த்தவளே!
காலை, மாலை தவறுதுன்
காலில் வீழ்ந்து வணங்கிடுவேன்

## மூன்று கள்வர்கள்

அடர்ந்த காட்டின் மத்தியிலிருந்து தம் திருட்டுத்தொழிலை நடத்தி வந்தனர் மூன்று கள்வர்கள். பெருந்தொகையான திருட்டுப்பொருள்கள் அவர்கள் வசமிருந்தன. ஒருவன் உணவுப் பொருள்கள் வாங்கி வரும்படியாகக் கிராமத்திற்குப் புறப்படுகின்றான். ஏனைய இருவரும் திட்டமொன்று தீட்டுகின்றனர். "அவனைக் கொன்றுவிட்டால் பெருஞ் செல்வமெல்லாம் எமக்கே உரியது. ம்! அவன் வரட்டும்; அவனை இன்றுடன் தொலைத்தாக வேண்டும்."

உணவுப்பொருள் வாங்கச் சென்றவனுக்கு ஒருயோசனை உதிக்கிறது. நான் வாங்கிச் செல்லவிருக்கும் உணவிலே நஞ்சைக் கலந்து விட்டால் இருவரும் இறந்து விடுவார்கள். அப்பொழுது திருட்டுப் பொருள்களெல்லாம் எனக்கே உரியது. தனதுதிட்டத்தைச் செயல்படுத்தினன்.

உணவுடன் திரும்பிய நண்பனைக் கொலை செய்தனர். நண்பன்வாங்கிவந்த உணவை உண்டஇருவரும உயிரிழந்தனர். திருட்டுப் பொருள்கள் எவருக்கும் கிட்டவில்லை. பணத்தையும் பொருளையும் பெற ஆசைகொண்ட இம்மூவரும் தீட்டிய திட்டமெல்லாம் அவர்கள் உயிரையே குடித்தது. ஆம்; துட்டருடன் கூடினல் கேடுவிளையும்.

— நோயல்

## "கிராமப்புறப் பாடசாலை ஆசிரியர்கள்"

கல்வி கற்பிக்கும் இளம் பெண்களும், ஆண்களும் பல முக்கிய பொறுப்புக்களைக் கொண்டுள்ளனர்; அவர்கள் மாணுக்கர்களை மாத்திரமல்ல முழுச்சமுதாயத்தையுமே அறிவிலே தெளிவடையச் செய்யவேண்டும்.

பகல் வேளைகளில் அவர்களிடம் சிறுவர்கள் கல்வி கற்கின்றார்கள். அச்சிறுவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குணத்தைக் கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட பிள்ளைகளிலே இருக்கும் திறமைகளைக் கண்டுபிடித்து அவர்களை முன்னேற்றப்பாதையிலே வழி நடத்துவதென்பது சுலபமானகாரியம் அல்ல.

ஆனல், மாணவர்கள் பாடசாலைமுடிந்து வீடு சென்றதும் ஆசிரியர்களுடைய கடமைகள் முடிவடைதில்லை. அவர்களுடைய ஓய்வுநேரத்தின் பெரும்பகுதி கல்வி கற்பித்தலிலேயே செலவிடப்படுகின்றது. சிறியவர்களுக்கு மாத்திரமல்ல பெரியவர்களுக்கும்தான். விசேஷமாகச் சிறியகிராமங்களிலே, புதிய எண்ணங்கள் கருத்துக்களைப் பெரியவர்களுக்கு எடுத்துரைக்கப் பலசந்தர்ப்பங்கள் உண்டு; அதாவது பல்வேறு வகையான துறைகளில் ஏற்பட்டிருக்கும் பிற்காலச் சீர்திருத்தங்களின் பயன்களை கிராமவாசிகளுக்கு எடுத்துரைக்கக் கூடியதாகவுள்ளது;

ஆசிரியர்கள் மரியாதையும் சாதுரியமும் இல்லாமல் இருக்கமாட்டார்கள். அவர்கள் சுயநலம் கருதமாட்டார்கள். அவர்கள் தம் கிராமத்தின்மேல் கொண்டுள்ள அன்பும், தமது சமுதாயத்திலுள்ள அங்கத்தவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற ஆவலும் அவர்களிலுள்ள சுயநலமின்மையை எடுத்துக் காட்டுகின்றன. அவர்கள் தனியான இடங்களில் கல்வி கற்பிக்கவும், நகரங்களில் வேலைசெய்வதற்கு ஏற்ற சந்தர்ப்பங்களையும், சௌகரியங்களையும், உதறியெறியவும் தயாராய் உள்ளனர். தமது கிராமத்தின் நலனுக்காகத் தம் உயிரையே அர்ப்பணிக்கத் தயாராய் உள்ளனர்; ஒவ்வொரு கிராமமும் தன்னகத்தே இவ்வகையான ஆசிரியர்களைக் கொண்டிருப்பதில் மகிழ்ச்சியடையும்.

சி; யோ. அலோசியஸ்

# உங்களுக்குத் தெரியுமா?

1808-ம் ஆண்டு வரையில் பாப்பரசர் கொடியின் நிறங்கள் சிவப்பும், மஞ்சளுமாய் இருந்து வந்தன. ஆயின், அவ்வாண்டிலே முதலாவது நெப்போலியன் சக்கரவர்த்தி இத்தாலியில் இருந்துவந்த தனது படைகளின் நிறங்களைச் சிவப்பும் மஞ்சளுமாக ஆக்கிவிட்டான். அதன்பின் ஏழாம் பத்திநாத பாப்பானவர் பாப்பரசர் கொடியின் நிறங்களை வெள்ளையும், மஞ்சளுமாக்கத் தீர்மானித்தார். "என்னிடம் பொன்னே, அல்லது வெள்ளியோ இல்லை" என்று அர்ச். பேதுருவானவர் கூறியதின் அடையாளமாக இவ்விரு நிறங்களும் தெரியப்பட்டன வென்று காரணங் கூறப்படுகிறது.

## அருட்சாதனங்களைப்பற்றிய வினு-விடை

1. சர்வேசுரனுடைய அருளை அடைவதற்கு உள்ள விசேஷ வழிகள் எவை?
அருட்சாதனங்கள்.

2. அருட்சாதனங்கள் எத்தனை உண்டு? அவை யாவை?
ஏழு. 1. ஞானஸ்நானம், 2. உறுதிப்பூசுதல், 3. நற்கருணை, 4. பச்சாத்தாபம், 5. நோயில் பூசுதல், (அவஸ்தைப் பூசுதல்) 6. குருத்துவம், 7. மெய்விவாகம்.

3. ஞானஸ்நானத்தால் நாம் என்ன பெறுகிறோம்?
சர்வேசுரனுடைய பிள்ளைகளாகப் பிறக்கும் வரத்தைப் பெறுகிறோம்.

4. உறுதிப்பூசுதலால் என்ன பெறுகிறோம்?
பரிசுத்த ஆவியின் விசேஷ ஏழு வரங்களைப் பெறுகிறோம்.

5. நற்கருணையால் என்ன பெறுகிறோம்?
யேசுநாதருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் நமது ஆத்தும உணவாகப் பெறுகிறோம்.

6. பச்சாத்தாபத்தால் என்ன பெறுகிறோம்?
ஞானஸ்நானம் பெற்றபிறகு செய்த பாவங்களுக்கு மன்னிப்பு பெறுகிறோம்.

7. நோயில் பூசுதலால் என்ன பெறுகிறோம்?
கடின நோயின்போது ஆறுதலையும், இரட்சணியம் அடைவதற்கு விசேஷ அருளையும் பெறுகிறோம்.

8. குருத்துவத்தால் என்ன கிடைக்கிறது?
திவ்வியபூசை செய்யவும், மற்ற அருட்சாதனங்களைத் தாவும் அதிகாரம்கிடைக்கிறது.

9. மெய்விவாகத்தால் என்ன கிடைக்கிறது?
நல்ல கிறிஸ்தவகுடும்பத்தை ஏற்படுத்த விசேஷ அருள் கிடைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G. C. E. (Ordinary Level)

# கிறீஸ்தவம்

க. பொ. த. பத்திரப் பரீட்சைக்குரியது (மார்கழி 1969)

— சிஸ். அன்ரனி யோசவ் —

## புனித லூக்காஸ் சுவிசேஷம்

[ இக்கட்டுரைகளைத் தயாரிப்பதில் பின்வருவனவற்றை உசாத்துணை நூல்களாகக் கொண்டேன்.]

1. லூக்காஸ் சுவிசேஷக் குறிப்புகள் — வண. பிதா வில்லியம் யேசுதாசன்
2. லூக்காஸ் சுவிசேஷம் — சிசிலியா சிமோர்ட்டி
3. லூக்காஸ் சுவிசேஷம் — புனித சூசையப்பர் கல்லூரி, கொழும்பு.

### வினா 6

**லூக்காஸ் தமது சுவிசேஷத்தை எப்போது, எவ்விடத்தில், எந்தப்பாஷையில், யாருக்காக எழுதினார்?**

**1. எப்போது:**

மூன்றும் சுவிசேஷம் ஜெருசலேம் பட்டணத்தின் அழிவைப்பற்றிய தீர்க்கதரிசனத்தைப்பற்றிக் குறிப்பிட்டாலும் அதன் நிறைவேறுதலைக் குறிக்கவில்லை. ஆகையால், அந்தச் சுவிசேஷம் ஜெருசலேமின் அழிவுக்கு முன் (கி. பி. 70-ல்) எழுதப்பட்டிருக்க வேண்டும்.

முற்காலத்து நூலாசிரியர்களுக்குள் அலெக்சாந்திரியாவின் கிளெமேந்துவைத் தவிர, மற்ற எல்லோரும், லூக்காஸ் சுவிசேஷம் மாற்கு சுவிசேஷத்திற்குப்பின் எழுதப்பட்டதாக ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஆகையால், லூக்காஸ் சுவிசேஷம் கி. பி. 60-ம் ஆண்டுக்குப் பின் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், 3-ம் சுவிசேஷம் அப்போஸ்தலர் நடபடிக்கு முன் எழுதப்பட்டது என்பதை யோசித்தால் அது 70-ம் ஆண்டுக்கு இன்னும் சொற்ப வருஷங்களுக்கு முன்பு எழுதப்பட்டதெனக் குறிப்பிடலாம். ஏனெனில், நடபடி எழுதி முடிய புனித சின்னப்பரின் 1-ம் சிறைப்பாடு ரோமையில் இரண்டு வருஷ காலமாக நீடித்துவிட்டதென்றும், அவருக்கு இன்னும் விடுதலை கிடைக்கவில்லையென்றும் அறிகிறோம் (நடபடி 28 : 30–31). ஆகையால், அப்போஸ்தலர் நடபடி 63-ம் வருடத்தில் எழுதி முடிந்திருக்கவேண்டும். இந்த நியாயங்களை எல்லாம் பரிசோதித்து லூக்காஸ் சுவிசேஷம் கி. பி. 61—62 ஆண்டுகளுக்கிடையில் எழுதி முடிக்கப்பட்டது என்று தீர்மானிக்கலாம்.

**2. எவ்விடத்தில்:**

புனித ஜெரோமும், புனித கிறகோறி நசியான்சனும் லூக்காஸ் சுவிசேஷம் அக்கேயாவில் எழுதப்பட்டது என்கிறார்கள். சில தோற்பத்திரங்கள் அலெக்சாந்திரியாவில் அல்லது மசிடோனியாவில் இது எழுதப்பட்டதெனக் குறிக்கின்றன. தற்காலத்து நூலாசிரியர் செசாறியா அல்லது எபேசஸ் அல்லது ரோமாபுரியில் எழுதப்பட்டிருக்கலாம் என்று சொல்லுகிறார்கள்.

லூக்காஸ் பிரயாணம் பண்ணிக்கொண்டிருந்தமையினால் அவர் மசிடோனியா அதாவது பிலிப்பியில் எழுதத்தொடங்கி, செசாறியாவில் தொடர்ந்து எழுதி, ரோமாபுரியில் முடித்திருக்கலாம். பின்பு அலெக்சாந்திரியாவிலும், எபேசசிலும், அக்கேயாவிலும் தமது சுவிசேஷத்தை வெளியிட்டிருக்கலாம்.

**3. எந்தப் பாஷையில்:**

லூக்காஸ் நிச்சயமாகக் கிரேக்கமொழியில் எழுதினார். அவருடைய கிரேக்க மொழிநடை மற்றச் சுவிசேஷகர்களுடையதிலும் பார்க்கத் திறமையானது. அவர் எபிரேய மொழியில் எழுதும்பொழுது எபிரேய தொடர்மொழிகளையும், சொற்றொடர்களையும் கையாளுகின்றார். மற்றும் வேளைகளில் சிறந்த கிரேக்க நடையைப் பயன்படுத்துகிறார். அவருடைய முகவுரை கிப்பொக் கிறேற்றஸ் என்பவரது பழைய வைத்திய நூலின் ஆரம்ப உரைக்குச் சமானமாக இருக்கிறது எனப் 'புலூமர்' சொல்லுகிறார்.

**4. யாருக்காக:**

இங்கே அவர் ஆருக்காக எழுதினார் என்பதைச் சொல்லுவோம். லூக்காஸ் தியோபிலசுக்குத் தமது சுவிசேஷத்தைப் பிரதிஷ்டை பண்ணினாலும், அதை அவருக்காக மாத்திரம் எழுதவில்லை. அவரைப் போல மனந்திரும்பிய சகல கிறீஸ்தவர்களும் தங்களுக்குப் "போதிக்கப் பட்டவைகளின் உண்மையை அறிந்துகொள்ள வேண்டுமென்றே" அதை எழுதினார். ஆனால், விசேஷவிதமாய் யூதரல்லாத புறசாதியாரானவர்களையே அவர் கருதினார் என்பதற்கு எட்டு உள் அத்தாட்சிகள் உண்டு.

1. எபிரேய பெயர்களுக்குப் பதிலாகக் கிரேக்க பெயர்களைப் பிரயோகிக்கிறார் (6 : 15; 6 : 40; 4 : 24; 9 : 27; 21 : 3; 23 : 33).
2. இடங்களைத் தெளிவாகக் குறிப்பிடுகிறார் (4 : 31; 8 : 26; 21 : 37; 23 : 51; 24 : 13).
3. யூதரின் வழமைகளை விளக்குகிறார் (2 : 21; 3 : 41; 22 : 1).
4. கிறீஸ்துவின் வம்சாவரிசையை ஆதாம் மட்டும் கொண்டுபோய், அவர் மனுக்குலம் முழுவதுக்கும் இரட்சகர் என்று காட்டுகிறார்.
5. இரட்சணியம் சகலருக்குமுரியது என்று காட்டுகிற வாக்கியங்களையும், சம்பவங்களையும் உவமைகளையும் கொடுக்கிறார் (6 : 6).
6. மத்தேயுவைப் போல் பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள்களை எடுத்தாளவில்லை. அவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டவையும் பொதுவாக யேசுநாதருடைய வாக்கியங்களுக்குள்ளேயே தோன்றுகின்றன (4 : 21; 21 : 22; 22 : 37; 24 : 44).
7. பிறசாதியாரை மனம் நோகப்பண்ணக் கூடியவைகளை விட்டுவிடுகிறார். அல்லது மாற்றுகிறார் (மத். 10 : 5-6, 15 : 26, 5 : 47, 6 : 32; லூக். 6 : 32, 12 : 30).
8. கர்த்தரின் பிறப்புக்காலத்தைச் சீசர் அகஸ்துஸ் என்னும் உரோமைச் சக்கரவர்த்தி மூலமாகவும், ஸ்நாபகர் போதிக்கத் தொடங்கிய காலத்தை உரோமைச்சக்கரவர்த்தி திபேரியஸ் சீசர் மூலமாகவும் நிச்சயிக்கிறார்.

# பசிபோக்கும் பரம உணவு

நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உன் ஜீவனத்தைத் தேடுவாய். ஆதியில் ஆதாமுக்கு இடப்பட்ட கட்டளை. உணவு உடலையும் உயிரையும் வளர்க்கிறது. ஒவ்வொருவனுக்கும் அவசியம் வேண்டியது உணவு. உணவு இன்றேல் உயிர் இல்லை.

வனாந்தரத்திலே இஸ்ராயேல் மக்கள் உணவின்றி அலைந்தனர். கடவுள் அவர்கள்மேல் இரங்கி மன்னா என்னும் அற்புத உணவை வானத்திலிருந்து விழச்செய்து அவர்கள் பசிபோக்கினார். கற்பாறையில் இருந்து அற்புதமாய் நீர்பெருகச் செய்து அவர்களின் தாகம் தீர்த்தார்.

கிறிஸ்துவின் வாழ்விலே உணவு எப்படி இடம்பெற்றது என்பதைப் பார்ப்போம். மலையிலே போதனைகேட்டு உணவில்லாமல் மயங்கிவிழும் நிலையிலிருந்த மக்கள் கூட்டத்தின் மேல் கருணைகொண்டு ஐந்து அப்பங்களைப் பலுகச்செய்து ஐயாயிரம் பேர்களுக்கு அதிகமானவர்களுக்கு கொடுத்துப் பசிதீர்க்கவில்லையா? உணவு பற்றிய உவமைகள் எத்தனையோ உரைத்தார்.

சமாரியப் பெண்ணோடு சம்பாஷித்தபின் அவளை அனுப்பிவிட்டார். அதன்பின் சீடர் உணவுடன் வந்து போதகரே சாப்பிடும் என்று கேட்க; "நான் சாப்பிடுவதற்கு நீங்கள் அறியாத போசனம் இருக்கிறது" என்று கூறினார். ஆம் அந்த உணவுதான் என்ன? "என்னை அனுப்பினவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதே எனக்குப் போசனமாய் இருக்கிறது." கிறிஸ்துவும் பசிதாகத்துடன் இவ்வுலகிற்கு வந்தார். ஆனால், அவரின் பசி சரீரப் பசியல்ல. ஆன்மாவின் பசியே! சிலுவையில் தொங்கிய போதுகூட இரட்சணியவாஞ்சையால் உந்தப்பட்டு தாகமாயிருக்கிறேன் என்று வசனித்தார்.

விருந்திலும் மேலான விருந்தாம் கடைசி இராப்போசனத்தில் தமது திருச்சரீரத்தை உணவாகவும் திருஇரத்தத்தைப் பானமாகவும் மாற்றும் வல்லமையைக் கொடுத்து மாபெரும் விருந்தை ஏற்படுத்தி மானிலத்தார்க்கு அளித்தார். இந்த ஆன்ம உணவுதான் இன்று மக்களுக்கு மட்டில்லாத வரங்களை வாரிக் கொடுத்து எமது ஞானஉயிரை வளர்க்கிறது. அன்று பந்தியிலே விருந்தளித்த பரமன் இன்று விருந்தாக எம்முள்ளம் வருகிறார். அன்று விருந்தின் மூலமே பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியில் அறிமுகமானார், ஆனல் இன்று நாமோ அவர்மீது கவனக்குறைவாய் நடந்து அவரின் உணவை வேண்டாமென்று வெறுத்தொதுக்குகிறோம். வீணிலே காலங்கழிக்கும் நாம் ஞான உயிர்க்கு வீரமளிக்கும் உணவைத் தேடாமல் அதைப் பலவீனப் படுத்துகிறோம்.

தாயானவள் தன்பிள்ளைக்கு உணவை ஊட்டும்போது அந்தப்பிள்ளை வாயில் உள்ள உணவை வெளியே சிந்திவிடுமானல் பிள்ளையின்நிலை எப்படியிருக்கும்? பிள்ளைபலவீனமடைந்து நோய்வாய்ப்பட்டுக் கடைசியில் உயிருக்கே ஆபத்து ஏற்படக்கூடிய நிலையும் ஏற்படக்கூடும். இது தான் எமது நிலையும், படைத்துக் காத்து, உதவியளித்து உயிர்ந்து கடைசியாய் உணவாகத் தம்மையே யளித்த கடவுளுக்கு நாம் செய்வது அவரையே மறந்து நல்வாழ்வு நிலையையே துறந்து அவரின் உதவிகளை வெறுத்து அவரின் உணவை உண்ண மறுத்து எமது ஞான உயிரையே சிதறடிக்கிறோம். இதுவா பிள்ளைகள் தம் தந்தைக்குச்செய்யும் கைம்மாறு?

ஆம் ஆண்டவரே! இதுவரையும் சீர்குலைந்த வாழ்வும் நீதிநெறிகெட்ட போக்கும், உம்மை மறந்த நிலையிலும் சிவித்தோம். இனிமேல் இத்தகைய வீழ்வாழ்க்கைக்கு இடம் கொடாது. உம்மிலே உம்மாலே என்றும் வாழ்வோம்

# ஞானப்பிரகாசர் நவணி

— மா. பீதாம்பரன் —

(இப்பாடல்: சுவாமிகளுடன் நெருங்கிப் பழகி ஆராய்ச்சி விடயங்கள் படித்தவரும், சைவசமய அறிஞரும், ஒய்வு பெற்ற கல்லூரி அதிபருமாகிய தமிழறிஞர் மா. பீதாம்பரனால், திருமலை புனித சூசையப்பர் கல்லூரித் "தமிழ் மன்றத்தினரின்" வேண்டுகோளுக் கிணங்க இயற்றப் பட்டது.)

சொல்வினை ஆய்ந்து நற்றொண்டு புரிந்திட்ட
தோமில் குலத் தோன்றல்
நல்லைப் பதியுறை நற்குருவாகிய
ஞானப்பிர காச மணி;

❋

சொந்த விலங்கைக்குத் தூய சுடரான
நந்தா மணி விளக்கு
முந்து மொழிதமிழ் என்று முழங்கிய
செந்தமிழ்ச் சிங்கேறு;

❋

வந்தநன் னாட்டிற்கு மங்காப் புகழ்தந்த
சிந்தனைச் செல்வநிதி
பந்த மகற்றும் பராபரன் பண்பினைப்
பாரில் வளர்த்த குரு

❋

யேசுபி ரான்றன் இதயப் பொருள்கண்ட
தேசிகர் தந்திலகம்
மாசில் வரன்முறை மாண்பினை ஆய்ந்திட்ட
ஆசிரி யர்தம் அணி

❋

மேற்றிசை மேதைகள் நாற்றிசை நாவலர்
போற்றிய போதகுரு
ஆற்றவி னூல்ஐம்பான் மிக்காற் பாசைகள்
போற்றும் புகழாளன்

❋

செஞ்சொற் செழுங்கலைச் செல்வனென் றேத்தியே
ஜேமனி போற்றியதால்
அஞ்சலிற் சின்னம் அமைத்த தகிலம் நின்
ஆற்றல் அறிந்ததுவே

❋

நின்னக ராதி நிறைந்து நிலவிடில்
நேரதற் கொன்றுமில்லை
சென்னியி லேயதைச் சேர்த்துச் சிறந்ததோர்
தேட்டமென் றேதெளிவர்

❋

செந்தமிழ் தன்னிற் சிலுவை நெறிதந்த
தேசிக நீயுலகில்
வந்தநன் னுளினைச் சிந்தனை கொண்டனம்
வாழ்கநம் ஞானகுரு

❋

சிங்க ளத்திற்கும் தாய்மொழி செந்தமிழ்
தேசம் எங்கும் செறிந்ததும் செந்தமிழ்
சிந்து நாட்டிற் சிறந்ததும் செந்தமிழ்
என்று நாட்டிய ஏந்தல் இணையடி
இன்றும் என்றும்யாம் இன்புடன் ஏத்துவோம்
வாழ்க! ஞானப்ர காசர் தமிழ்நெறி
வாழ்க! தண்டமிழ், வாழ்க! வழிமுறை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிலாத்துவின் ஆணை :

கிறிஸ்துநாதரை விசாரணை செய்தபின் அவருக்கு மரணத் தீர்ப்பைப் போஞ்சியு பிலாத்து வழங்கினான் அல்லவா? இத் தீர்வைபற்றிய ஆணைப்பத்திரம் ஒன்றை அவன் தயாரித்து ஒரு பிரதியை மேலதிகாரிகட்கு அனுப்பியிருக்க வேண்டும். மற்றைய பிரதியைத் தனது மறு பத்திரங்களுடன் தகவல்களஞ்சியத்தில் சேர்த்திருத்தல் வேண்டும். இது அக்காலத்திய வழமை. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் கலிபோர்ணியாவின் தென்பகுதியில் தங்கச் சுரங்கங்களைத் தேடிச்சென்ற ஆங்கிலேயன் ஒருவனால் கண்டெடுக்கப்பட்ட பத்திரமொன்று கிறிஸ்துவுக்கிடப்பட்ட மரண தண்டனைக்குரிய ஆணைப் பத்திரமாக அறியப்படுகிறது.

### நீதியா, அநீதியா ?

கிறிஸ்துநாதரின்மீது நடாத்தப்பட்ட விசாரணைகளை நான்கு நற்செய்திஏடுகளும் நன்கு வெளிப்படுத்துகின்றன. அவற்றில்இருந்து இவ்விசாரணைகள் நீதியை அவமதிப்பதாயும், சட்டத்தின்மீது சர்வாதிகாரம் ஆட்சிசெலுத்தியதாயும், தமக்கு வேண்டாதஒருவரை ஒழித்துக் கட்டுவதற்குச் செல்வாக்குள்ளபலர் ஒன்றுதிரண்டு சதிசெய்ததாயும் தெரியவருகின்றது. எனினும் மரணத்தீர்வை அளிக்கும் மாபெரும்பொறுப்பு தேசாதிபதிக்கு மட்டுமே உரியது. எனவே கிறிஸ்து குற்றமற்றவர்என நன்குணர்ந்த பிலாத்து மரணத்தீர்வையை வழங்கிவிட்டு மேலதிகாரிகட்குத் தன்மீது சந்தேகம் உண்டாகாதிருக்க ஒரு போலி ஆணைப் பத்திரத்தையாகுதல் தயார் செய்திருக்கக்கூடும்.

### நியாயவாதி தேர்த்துல்லியன் :

2-வது நூற்றுண்டில்வாழ்ந்தவரான தேர்த்துல்லியன் கிறிஸ்தவர், வழக்கறிஞன். இவர் கிறிஸ்துவின் மரண ஆணைப்பத்திரத்தைத் தாம் தேசாதிபதியின் "பைல்" கட்டு கட்குள் கண்டதாகக் குறிப்பிட்டிருக்கிறுர். எனவே கலிபோர்ணியாவில் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் மரண ஆணைப்பத்திரம் பலஸ்தீனத்திலிருந்து அல்லது உரோமாபுரியிலிருந்து அங்கு சென்றிருக்கலாம். கலிபோர்ணியாவில் கண்டெடுக்கப்பட்ட பத்திரத்தைத் தமது பாட்டனுர் மிக அழகாகப் பிரதிசெய்து வைத்திருந்தாரென்றும் அப்பிரதியைத் தாம் நன்கு வாசித்தறிந்தாரென்றும் டாப்னி அயிலிஸ் என்பவர் அண்மையில் வெளியிட்டிருக்கிறுர்.

### ஆணையின் வாசகம் :

இப்பத்திரம்பற்றிய தகவல்கள் உண்மையா அல்லது போலியா என்பதை ஆராய்வது அனவசியமானது. பைபிள் ஆராய்ச்சியாளர்களின் அலுவல்அது. ஆயின் இந்த மரண ஆணைப் பத்திரத்தில் குறிக்கப்பட்டிருக்கும் விபரங்கள் சுவாரஸ்யமானவை.

உலகெலாம் ஒருகுடைக்கீழ் ஆளும் தைபீரியஸ் சீசரின் 17ஆம்வருட ஆட்சிக்காலத்தில் வைகாசி மாதம் 25-ந் தேதியன்று உரோமைய சக்கிரவர்த்தியின் பிரதிநிதியாகிய போஞ்சியு பிலாத்துவாகிய நாம், நசரேத்து ஊரவனாகிய யேசுஎன்பவனைக்கொலைக்குரிய குற்றவாளியாகக்கண்டு மரணத்தீர்வை வழங்குகின்றோம். இம்மனிதன் கலிலேயாவின் கலகக்காரருள் மிகமுக்கியமானவன். யூதர்களின் மோயீசன் பிரமாணங்கட்கெதிராக மட்டுமல்ல, சக்கரவர்த்தி சீசருக்கு விரோதமாகவும் மக்களைத் தூண்டியவன், நாட்டில் குழப்பத்தையும், ராஜவிசுவாச

# பே
# சு
# ம்
# பே
# னா



மின்மையையும் கிளப்பும் இப் பயங்கர குற்றவாளி தன்னை இசிறவேலரின் அரசனாகமுயற்சித்தும், ஜெருசலேமை அழித்துவிடத்திட்டமிட்டவனாகவும் சீசருக்குத் திறைசெலுத்தாதிருக்க மக்கட்குப் புத்திகூறுபவனாகவும் விளங்கினானென விசாரணையின்போது தெரியவந்துளது. தானே இசிறவேலரின் அரசனென்பதைக் காட்டக் குற்றவாளி மிகப்பெரிய ராஜரிகபவனியில் ஜெருசலேமுக்குள் பிரவேசித்து ஆலயத்துள்ளும் விரும்பத்தகாத செயல்களில் ஈடுபட்டான். எனவே, இப்பயங்கர குற்றவாளி ராஜ, தேவதுரோக குற்றங்கட்காகத் தகுந்த தண்டனையை அனுபவிப்பதுடன் கலகக்காரரும், ராஜதுரோகங்களில் ஈடுபடுவோரும் இனிமேலும் இவ்வித தீயசெயல்களில் ஈடுபடாவண்ணம் குற்றவாளிகள் அனைவருக்கும் ஒருநல்ல பாடமாக இவனுக்கு அளிக்கப்படும் தண்டனை விளங்கவேண்டுமெனத் தீர்மானிக்கிறோம்.

எனவே, யாம்எமது செந்தூரியன் குயின்ரஸ் கொர்னீலியசுக்குக் கட்டளையிடுவதாவது: மேலே கூறப்பட்ட குற்றவாளி யேசுக்கிறீஸ்துவின் தோள்களில் சிலுவையொன்றைச் சுமத்தி குற்றவாளிகட்குரிய ஊதாநிற அங்கியுடனும், சிரசில் முள்முடியுடனும், தேகத்தில் கசையடிகள் விழுந்தவண்ணமும் ஜெருசலேம் வீதிகளூடாக நகரத்துக்கு வெளியே அந்தோனியா வாயிலினூடாகத்தீயவர்களின் பிரதேசமான கல்வாரிமேட்டுக்குக் கொண்டு சென்று அங்கு இரு மாணத்தீர்ப்புப்பெற்ற குற்றவாளிகளின் நடுவே உயிர்போகும் வரை சிலுவையில் தொங்கவிடப்படுதல் வேண்டும். இந்த மனிதன் யேசுவின் சிலுவையின்மேல் கீப்ரு, கிரேக்க, லத்தீனிய மொழிகளில் **நசரேனாகிய யேசு யூதர்களின் இராசா என்ற வாக்கியம் பொறிக்கப்படுதல் வேண்டும்.** சீசர் அரசரால் எமக்களிக்கப்பட்ட சகல அதிகாரங்களுக்குமிணங்கச் சக்கரவர்த்திக்கெதிராகச் சதிசெய்யும் சகல துரோகிகளும் இவ்வித பயங்கர தண்டனைக் குள்ளாவார்கள் என்பதை இத்தால் பிரகடனப் படுத்துகிறோம்.

### பத்திரம் எங்கே ?

போஞ்சியு பிலாத்துவின் பத்திரங்களுடன் காணப்பட்ட இந்த மரணஆணைபின்னர் மிக முக்கியமானதொரு பத்திரமாகக் காணப்பட்டமையால் இதன்பெறுமதி உயர்ந்து விட்டது. எனவே பிற்காலத்தில் தொல்பொருட்களை விரும்பிச் சேகரிப்போர் கிடைத்தற்கரிய இப்பத்திரத்தைப் பெரும்பொருள்கொடுத்து வாங்கியிருப்பர், அல்லது இப்பத்திரம் இரகசியமாகக் களவாடப்பட்டு, பெரும் பொருளுக்கு விலைப்பட்டிருக்கலாம். இந்நூற்றுண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட அப்பத்திரம் இன்னமும் எங்காவது மறைத்துவைக்கப் பட்டிருக்கலாம்என்றே பைபிள் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

### மன்னிக்க வேண்டுகின்றேம் :

கடந்தவார பேசும் பேனாவில் அச்சுத்தவறுதலாக செவ்வி என்ற சொல் மாற்றம்பெற்றுவிட்டது. அதனால் பொருள் விளங்காது நேயர்கள் இடர்ப்பட்டனர் எனஅறிந்து மன்னிப்பு கோருகின்றோம். பேட்டியளித்தல், தரிசனம் தருதல் என்றகருத்தமைய தற்போது அரசாங்க கலைச்சொல் குழுவினரால் உபயோகிக்கப்படும் செவ்விஎன்ற தூயதமிழ்சொல்லையே நாமும் உபயோகிக்க விரும்பினேம். இத்தவறுதலைச் சுட்டிக்காட்டிய குரவருக்கு எம்நன்றி.

### விளம்பரம் :

ஏழ்மையில் பிறந்தார். 33 வருடங்கள்மட்டுமே வாழ்ந்தார். வாழ்நாள் முழுவதும் புரிந்துகொள்ள முடியாத ஒரு மனிதராகவே தோன்றினார், பகிரங்க பதவிகள் எதையும் வகிக்கவில்லை. ஒரு நூலைக்கூட தமவாழ்நாளில் எழுதவில்லை. இரண்டு கள்வரின் நடுவே சிலுவையில் அறையப்பட்டு உயிர் துறந்தார். ஆயின் இரண்டாயிரம் வருடங்களின் பின்னும் இந்த மனிதனை 95 கோடி மக்கள் பின்செல்லுகின்றனர். இதன் இரகசியத்தை அறிய விரும்பினுல் எழுதுங்கள் இம்முகவரிக்கு.

### எதிர்பாருங்கள் :

மேற்கூறிய விளம்பரம் 17356 பேரை கிறிஸ்துவின் வழிக்கு கொண்டுவந்துசேர்த்தது. விபரங்கட்கு அடுத்த வாரம்வரை காத்திருக்க வேண்டுகின்றேன்.


**நன்றியறிந்த ஸ்தோத்திரம்**

யேசுவின் திருஇருதயம், பரிசுத்த திருக்குடும்பத்தின் ஆசியினாலும், புனிதர் அந்தோனியார், செபஸ்தியார் சின்னத்திரேசம்மாள், பத்தாம் பத்திநாதர், சுவாமி அக்னெலோ இவர்களின் மன்றாட்டினாலும் எனக்கு பூரணசுகம் கிடைத்ததை நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்..

பேசாலை, பக்தன்.


## அறிவித்தல்

### மருதமடுத் திருப்பதி

மருதமடுத் திருப்பதியிலுள்ள தண்ணீர் நிலையத்துக்குப் பாரிய பழுதுபார்த்தல் வேலைகள்செய்ய வேண்டியிருப்பதால், திருப்பதி ஆவணி 18-ந் தேதி தொடக்கம் ஐப்பசி 31-ந் தேதிமட்டும் மூடப்பட்டிருக்கும். இக்குறிக்கப்பட்ட காலத்தில் யாத்திரிகர்களுக்கு திருப்பதியில் எவ்விதவசதிகளும் அளிக்கப்படமாட்டாவென்று மருதமடுமாதாவின் பக்தர்களுக்கு வருத்தத்துடன் அறிவிக்கின்றோம்.

திருப்பதித் தலைவர்.

## வேதியர்க்கழகு...?

[2ஆம் பக்கத் தொடர்ச்சி]

இப்பக்திமுயற்சி துவங்குவதற்குமுன்பே வாதரோகத்தால் அல்லலுற்ற 13 பிராயமுடைய சிறுமி பெர்த்டல் போமென் தன் வேதனைகளைச் சின்னத்தெரேசம்மாளைப்போல் தேவனின் விசேஷித்தஉவுதலால் குருக்களின் அர்ச்சிப்புக்காக ஒப்புக்கொடுத்து வந்திருந்தாள். இவ்வாறு ஒரு பக்திமுயற்சி இப்பொழுது திருச்சபை அதிகாரிகளால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதைக் கேள்வியுற்ற இச்சிறுமி பெரிதும் உவகை கொண்டாள். தன் அலுவலைத் தொடர்ந்து செய்ய விரைவில் வான்வீட்டுக்கே பறந்து சென்றுவிட்டாள்.

அதிவண. பாஸ்கால் அடிகளார் பரிசுத்த தந்தைக்குச் சமர்ப்பித்த பக்தித்திட்டத்தில் முக்கிய இடம் வகித்திருந்தது கிறிஸ்துநாதரின் நித்திய குருத்துவத்தின் பூசை. ஆனல், ரோமை இப்பூசையைச் சொல்ல மறுப்புத் தெரிவிக்க நேர்ந்த பொழுது, விண்ணகம்சென்றுள்ள பெர்த்டல் போமென் என்ற இளமாதை நோக்கி ஒரு நவதின வேண்டுதல் துவக்கினர் இக்காரியசித்திக்காக. என்னே ஆச்சரியம்! நவதின முடிவு தினத்துக்குள் கோரிய மன்றாட்டு அனுகூலம்பெற்றுவிட்டது. ரோமை அப்பூசையை உபயோகப்படுத்த அனுமதியுடன் உற்சாகமும்ஊட்டியது. அன்றிலிருந்து மாதத்தின் முதல் வியாழக்கிழமை குருமாரின் அர்ச்சிப்புக்காக மன்றாடும் தினமாக இடம் பெறலாயிற்று. இத்துடன் நில்லாது வாரத்தின் ஒவ்வொரு சனிக்கிழமையும் குருமாருக்காக மன்றாடும் சுகிர்த பழக்கத்தைச் சில துறவற சபையினரும் அனுசரித்து வருகின்றனர். இவர்களுடைய இந்த ஆர்வம் பொதுமக்களும் இப் பக்திமுயற்சியில் விரும்பிக் கலந்து கொள்ளவும் உதவியாக இருக்கிறது.

எனவே, இன்றிலிருந்து எம்வாழ்வில் ஒரு புதிய திட்டத்தை உருவாக்குவோம். நற்கருணை நாதரைச் சந்திக்கும் நேரங்களில் நற்கருணையில் கிறிஸ்துவைக் கொண்டுவரும் குருமாரின் அர்ச்சிப்புக்காக மன்றாடுவோம். 'வேதியர்க்கழகு வேதமும் ஒழுக்கமும்' என்ற முதுமொழி நிறைவுபெற எமது தியாகமும் மன்றாட்டுக்களும் உதவுவனவாக.

நற்கருணை நடுநிலையம்,
சஞ்சுவாம் கோயில்,
யாழ்ப்பாணம்.


"புதிய சுண்டிக்குளிச் சந்திக்கருகாமையில்"

**ஏ. எவ். றேமண்ட்ஸ்,**

147, மெயின்வீதி,
யாழ்ப்பாணம்.

குறைந்த செலவில்
மனம்நிறைந்த

**அந்தியசேவை**

ரூபா 175/-

உயர்தர பிரேதப்பெட்டிகள்
ரூபா 50/-


## தந்தையின் இல்லத்தில் திவ்விய பூசைப் பலி

அறுபது வயது முடியுமட்டும் சிறைச்சாலையில் உத்தியோகம்பார்த்து இளைப்பாறிய திரு. ஏ.டீ.ஜீ. அமிர்தம்பிள்ளை அவர்கள் தற்போது பொறனையில் இருக்கும் இல்லத்தில், அன்னரின் பிறந்த தினமாகிய ஆவணி மாதம் 4ம் திகதி திங்கட்கிழமையன்று அவருடைய புத்திரனாகிய Rev.Fr. Oswald Amirthampillai (றெட்னருஜா) என்னும் குருவினால் - விருத்தாப்பியரான தந்தையின் இல்லத்திலே திவ்விய பூசைப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. அத்தருணத்தில் திரு. அமிர்தம்பிள்ளை அவர்களின் மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் இனபந்துக்கள் மற்றும் தேவனின் பக்தியுள்ள பல கிறிஸ்தவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து பயபக்தியாவே திவ்விய பூசைப் பலியைக் கண்டு அதைத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்தார்கள். இதில் அநேகர் திவ்விய நற்கருணை விருந்தில் பங்குபற்றினர்கள்.

திரு. அமிர்தம்பிள்ளை அவர்களையும் அவரின் சந்தானத்தார்களையும், இனபந்துக்களையும், உற்ற மித்திரர்களையும் தேவன் பல்லாண்டு காலம் சிரஞ்சீவியர்களாக இனிதே வாழ இறைவன் ஆசீர்வதிப்பாராக.


**நன்றியறிந்த ஸ்தோத்திரம்**

பிறேக்நகர் பாலக யேசுவின் இரக்கத்தால் என் மன்றாட்டுக் கேட்கப்பட்டமைக்கு நன்றி கூறுகிறேன். ஒருபக்தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### புரட்டாசி—1969

| | | | |
|---|---|---|---|
| 7 | ஞாயிறு | பரி. ஆவி. விழா. பின் 15-ம் ஞாயிறு | [ப] |
| 8 | திங்கள் | பரி. கன்னிமரியாயின் பிறப்பு | [வெ] |
| 9 | செவ்வாய் | கிழமைப் பூசை | [ப] |
| 10 | புதன் | புனித நிக்கொலஸ் | [வெ] |
| 11 | வியாழன் | கிழமைப் பூசை | [ப] |
| 12 | வெள்ளி | தேவதாயின் திருப்பெயர் | [வெ] |
| 13 | சனி | மரியன்னையின் பூசை | [வெ] |

# காவலன் கருத்து

## மரியாயின் பிறப்பும் வியாகுலமும்

உலக சரித்திரத்திலேயே அன்ருேர் இனிய நாள். அன்றுதான் யுவக்கீம் அன்ன தம்பதிகளுக்கு, பெண்களுள் ஆசீர்வதிக்கப்பட்டவளும், எமது ஆதிப் பெற்ருேருக்கு வாக்குப்பண்ணப்பட்டவளும், தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்டவளும், உலக இரட்சகரைத் தன் உதரத்திலே தாங்கி மனிதகுலத்தின் நிந்தையை நீக்கப் போகிறவளுமான எங்கள் நாயகி உதித்தாள். இரவு முழுதும் அல்லற்பட்ட நோயாளியொருவன் காலை இள ஞாயிற்றின் ஒளியைக் கண்டு எத்தகைய மகிழ்ச்சியும் நிம்மதியும் அடைவானே, அதேபோன்று நாலாயிரம் ஆண்டுகளாகத் தன் தவறுகள், துன்மார்க்கங்களெனும் நோய்ப்படுக்கையில் உழன்ற உலகானது அன்று ஒரு புது உதயத்தை எதிர்நோக்கிக் களிகூர்ந்தது. நீதியின் சூரியனுகிய யேசுவை மனுக்குலத்துக்களிக்கும்பொருட்டு தேவனுல் தேர்ந்தெடுக்கப்பட்டவளான தூய கன்னி அன்று பிறந்தாள்.


மனிதர் அழகை நாடுகின்றனர். அந்த அழகின் சிகரம் அவள். மகிமையைத் தேடுகின்றனர். அவளது மகிமை மனதில் கற்பனைசெய்துபார்க்கவும் முடியாதது. "எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்" என அவள்மட்டுமே கூறியிருக்க முடியும். மக்கள் மகிழ்ச்சியைத் தேடுகிருர்கள். மரியாயின் பிறப்பு உலகே களிகூர்வதற்கு ஏதுவான ஒரு சம்பவம். மக்கள் அன்பைத் தேடுகிருர்கள். தாய்மையின் அன்பு பரிபூரணமாக அவளிடத்தில் அமைந்திருந்தது. இவ்விதமாக மக்கள் நன்மையெனக் கருதும் தன்மைகள் அனைத்தும் தன்னிடம் ஒருங்கு திரண்டு உருப்பெற்றவளான கன்னிமரி வாழ்க்கையின் எந்தச் சந்தர்ப்பத்திலும் கடைப்பிடிக்கவேண்டிய புண்ணியங்களுக்கு ஒரு முன்மாதிரிகையாக விளங்குகிருள். மாதாவின் வியாகுலங்களுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட இம் மாதத்தில் துன்பத்தின் மத்தியில் அவள் நடந்துகொண்ட விதத்தைப்பற்றிச் சற்றுச் சிந்தனைசெய்வோம். மரணத்துள் அவமானகரமான மரணத்துக்குத் தீர்க்கப்பட்டு அணு அணுவாக மரித்துக்கொண்டிருக்கும் தன் குமாரனது சிலுவையடியில் நிற்கும் மரியாளை நோக்குவோம். யேசு அனுபவித்த பாடுகள் அனைத்தும் அவளது இதயத்தில் எதிரொலித்தன. அவளது மனத்துயரை நாம் கற்பனை செய்து பார்க்கவும் முடியாது. ஆனுல் அவ்வேளையிலும் அவள் தன் மன உறுதியை இழக்கவில்லை. சிந்திக்கும் ஆற்றலை இழக்கவில்லை. தன் குமாரனின் பாடுகள் அனைத்தும் உலக இரட்சணியத்துக்கு அவசியமானவை என அறிந்திருந்தாள். எனவே அவள் அழவில்லை, புலம்பவில்லை. தனது துயரத்தையும் யேசுவின் பாடுகளோடு ஒன்றுசேர்த்து ஒப்புக்கொடுத்து மனுக்குலத்தின் இரட்சணியத்தில் பங்குபற்றினுள். தாங்கொணுத் துயரத்தைத் தன் இதயத்தில் சுமந்தபோதிலும் பிறரது அனுதாபத்தை வேண்டவில்லை. துன்பத்தைக் கண்டதும் தன் நிலையை இழந்துவிடலாகாது. அதை மகிமையோடும் கௌரவத்தோடும் அனுபவித்து, அதனுல் அடையக்கூடிய பெறுபேறுகளை விரயமாக்காது அடைய முயலவேண்டும் என்பதை மக்களுக்கு மாதாவின் செய்கை துலாம்பரமாகக் காட்டுகிறது.

மாதாவின் பிறப்பால் உலக இருள் நீங்கியது; அதேபோன்று ஆன்மாவை மூடியிருக்கும் பாவஇருளும் நீங்கவேண்டும். அதற்கு வழி உலகின் ஒளியாகிய கிறிஸ்துநாதரை ஆன்மாவிற் பிரகாசிக்கச் செய்வதேயாகும். மாதாவின் கரத்தைப் பற்றிச் செல்லும் எவருக்கும் இந்த ஒளியைக் காண்பது கஷ்டமாக இராது.

# மணியோசை

4

திவ்விய பாலகனைக் கரத்தேந்திய மரியன்னை தேவாலயத்தில் காத்திருந்தாள். பிரதான குருவான சிமியோன் குழந்தையைக் கரத்தில் எடுத்து வானம் மட்டாக உயர்த்தினுர். ஞான ஒளி அவர் உள்ளத்தில் வீசியது. உலகோரின் ஒளியாகவும், இஸ்றவேலரின் மகிமையாகவும் விளங்கவிருக்கும் இப்பாலகன் அன்னையே உமது துயரங்களின் இருப்பிடமாகவும் விளங்குவார் என வசனித்தார்.



ஆம், தேவகுமாரனின் வாழ்க்கையில் பல ஏடுகள் மரியன்னைக்கு மகத்தான துன்பங்கள் தருபவையாக அமைந்தன. தனது பச்சிளங்குழந்தை விருத்த சேதனத்தால் துயருற்றபோது விம்மி விம்மி அழுதாள் அன்னைமரி.

கொடிய ஏரோதன் உலகோரின் ஒளியை அணைக்க முயற்சித்தபோது இன்னல்கள் மத்தியில் ஈசிப்துக்குக் கொண்டோடினுள் தேவபாலனைப் பாதுகாப்பதற்காக. பன்னிருவயதில் அன்பு மைந்தன் ஆலயம் சென்றவேளையில் காணுது மூன்று நாட்கள் அன்னை அடைந்த துயரங்கட்கு அளவேயில்லை.

தன் வாலிபப் புதல்வன் இறுதியாண்டுகளில் கல்லிலும், முள்ளிலும், கொடிய வனந்தரங்களிலும் அலைந்து திரிந்து ஆண்டவனின் பாதையைப் போதித்த காலையில் தனயனின் நிலைகண்டு வருந்தினுள் அந்தத் தாய்மரி.

அழகுமிக்க திருவதனத்தில் காட்டிக்கொடுத்தவன் முத்தமிட்டபோது, வலிமைமிக்க கரங்களில் சங்கிலிகளை மாட்டி இழுத்துச் சென்றபோது, பொன்னுர் மேனியில் பயங்கர கசையடி தந்தபோது, திருச்சிரசில் முள்முடி வைத்தடித்தபோது கன்னிமரியாள் கண்ட துயரங்கட்கு ஈடுண்டோ?

வியாகுலப்பாதையில் குற்றவாளியென இழுக்கப்பட்டு வந்த தன்திருமகனைப் பின்தொடர்ந்தபோது, கல்வாரியில் இரட்சணிய அலுவலின் இறுதிக் காட்சிகளுக்குச் சாட்சியாக நின்றபோது அந்த அன்புத்தாய் பட்ட வியாகுலங்கட்கு எல்லையுண்டோ? அழகு சௌந்தரியமிக்க தன் திருமகனுரின் சடலம் கொடிய குற்றவாளியின் நிலையில் தன் மடியில் வளர்த்தப்பட்டபோது இதுகாலவரை அடைந்த துன்பங்களிலும் மிகப் பெரிய இன்னலை மரியாள் அனுபவித்தாளெனக் கூறப்படுகின்றது.

இத்தனை துன்பங்கட்கும் மத்தியில் வீரத்துவமிக்க ஒரு வீராங்கனையாகவே அம்மாது சிரோன்மணி எமக்குத் தோற்றுகிருள். அவள் அழுது பிரலாபிக்கவில்லை. அங்கலாய்த்துக் கண்ணீர் வடிக்கவில்லை. இறைவனைத் திட்டியோ, அடுத்தவர்மேல் பழிகூறியோ தன் துயரங்களைத் தீர்க்க முயற்சிக்கவில்லை.



இறைவனுல் தனக்களிக்கப்பட்ட இன்பியல் நிகழ்ச்சிகளைப் பொறுமை, அடக்கம், பணிவு, தாழ்மை, ஏழ்மை என்ற புண்ணியங்களோடு ஏற்றுக்கொண்ட மரியன்னை துன்பியல் நிகழ்ச்சிகளின் போதும் அதே அம்சங்களையே பிரதிபலித்தாள்.

எங்கள் வாழ்வில் இன்ப நிகழ்ச்சிகளிலும் பார்க்க துன்ப நிகழ்ச்சிகளே அதிகம். அத்தருணங்களிலெல்லாம் எங்கட்கு வழிகாட்டியாக விளங்குபவள் கன்னிமரியம்மாளே. இதையுணர்ந்த திருச்சபையன்னை இம்மாதம் முழுவதையும் கன்னிமரியின் வியாகுலங்களைத் தியானிப்பதில் முக்கியம் தருகிருள்.

வியாகுலத்தாய் எங்கள் வியாகுலங்களில் ஆறுதல் கூறவல்லவள். எங்கள் வியாகுலங்களைத் தாங்கவல்லவள். எங்கள் துன்பதுரிதங்களைப் பொறுமையோடு ஏற்றுக்கொள்ள அவள்வழிச் செல்வோம். அவள் பாதுகாவலில் எங்கள் துன்பங்களில் செயல்படுவோம்.

— மடோனு

## லூர்துமாபதியில் மேற்றிராணிமார் கூட்டம்

இந்த வருடம் கார்த்திகைமாதத்தில் பிரான்சுதேச மேற்றிராணிமார் லூர்துமாபதியில் கூடி அத்தேச திருச்சபையின் பிரச்சினைகளை ஆராயத் திட்டமிட்டிருக்கின்றனர். விசேஷமாக குருமாரின் விரத்தத் துவத்தைப் பற்றி பரிசுத்ததந்தை விடுத்த அறிக்கையைப் பரிசிலனைசெய்து அதற்கு ஏற்ற நடபடிகள் எடுத்துக் கொள்ளுவர். அத்துடன் இதுகாலவரையும் அந்நாட்டில் நிலவிவந்த பங்கு விசாரணை முறைகளைத் திருத்தி இக்காலத்துக்கேற்ற முறைகளை நிறுவவும் அவர்கள் ஆலோசனைகள் நடத்துவார்கள்.

## பாப்பரசரின் துயரம்

வடஅயர்லாந்தில் பெரும்பான்மையோராயிருக்கிற புரொட்டஸ்தாந்தருக்கும் சிறுபான்மையினராயிருக்கிறகத்தோலிக்கருக்குமிடையில் சென்ற இருவருடங்களாக தொடர்ந்துவரும் கலகங்கள் பரிசுத்ததந்தை 6-வது சின்னப்ப பாப்பரசருக்கு பெரிதும் கவலையைக் கொடுத்து வருகின்றது. "இப்படியான பயங்கரநிலைமைக்கு அந்நாடு வருமென நாம் ஒருபோதும் எண்ணியிருக்கவில்லை. இப்பூசல்கள் சமய வித்தியாசத்திஞல் மாத்திரம் காரணமாயின என்று ஒருவரும் எண்ணிவிடப்படாது. அப்பகுதியின் சரித்திர சமூக அரசியல் காரணங்களும் இக் கலகங்களுக்குக்காரணங்களாயிருக்கின்றன" என்ருர் பரிசுத்த தந்தை.

## 1326 பாஷைகளில்

புதிய ஏற்பாடு 1326 பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதாவது உலக சனத்தொகையில் 96 சதவிகிதமானோர்புதிய ஏற்பாட்டைத் தம் சொந்த மொழியிலே வாசிக்கக் கூடியதாயிருக்கிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969 ஆம் ஆ. புரட்டாசிமீ 6ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org